BUDGET 2026

மாறிவரும் உலகில் நமது வருங்காலத்தை நிலைநாட்டுதல்



என் சக சிங்கப்பூரர்களே,

2026ஆம் ஆண்டு, எஸ்ஜி60க்குப் பிந்தைய நமது நாட்டு நிர்மாணப் பயணத்தின் முதல் ஆண்டைக் குறிக்கிறது.

உலகளவில் ஏற்படும் பெரும் மாற்றங்களுக்கு இடையில் நாம் இந்தப் புதிய காலக்கட்டத்தில் அடியெடுத்து வைக்கிறோம்.

இன்றைய உலகம் மேலும் பிளவடைந்த, போட்டி நிறைந்த, ஆபத்தான ஓரிடமாக மாறிவிட்டது.

இத்தகைய சூழலைச் சமாளிப்பதற்கு நாம், நம்முடைய உத்திகளைப் புதுப்பிக்கவேண்டும்; சமுதாய இணக்கத்தை வலுப்படுத்தவேண்டும்.

நாம் தொடர்ந்து நல்ல வேலைகளை உருவாக்கி, அனைத்துச் சிங்கப்பூரர்களையும் கைதூக்கிவிடுவோம்.

நிச்சயமற்ற சூழ்நிலைகள் தொடரும் நிலையிலும்கூட நாம் குடும்பங்களுக்கு மேலும் அதிக நம்பிக்கையையும் ஆதரவையும் அளிப்போம்.

நம்முடைய தற்காப்பு, பாதுகாப்புத் திறனாற்றல்களில் முதலீடு செய்து, மேலும் நீடித்த நிலைத்தன்மையுடைய எதிர்காலத்தை உருவாக்க, நமது நீண்டகாலத் திட்டங்களைத் தொடர்வோம்.

இவற்றுக்கெல்லாம் மேலாக, நமது சிங்கப்பூர் உணர்வைப் புதுப்பித்து, வலுப்படுத்துவோம் – ஒரு மக்களாக ஒற்றுமையும் மீள்திறனும் கொண்டு செயல்படுவோம்.

நாம் ஒன்றிணைந்து, மாற்றங்கள் நிறைந்த இவ்வுலகில் நமது எதிர்காலத்தைப் பாதுகாப்போம்.

லாரன்ஸ் வோங்
பிரதமர்
& நிதி அமைச்சர்



உங்களுக்கான ஆதரவு

ஏப்ரல் 2026 – மார்ச் 2027

சிங்கப்பூரர்களுக்கான ஆதரவு

ரொக்கம்

21 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு

- **வாழ்க்கைச் செலவினச் சிறப்புத்தொகை**
  தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு

  $200 முதல் $400 வரை

- **உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்**
  அனைத்துச் சிங்கப்பூரர்களுக்கும்

  $100 முதல் $250 வரை

- **பொருள், சேவை வரிப் பற்றுசீட்டுத் திட்டம்**
  குறைந்த, நடுத்தர வருமானம் ஈட்டும் சிங்கப்பூரர்களுக்கு

  $450 அல்லது $850

- **பிள்ளைகளுக்கான LifeSG சிறப்புத்தொகை**
  12 வயதிற்கும் குறைவான எல்லாச் சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கும்

  $500

குடும்பங்களுக்கான ஆதரவு

- **சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்**
  அனைத்துச் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கும்

  $500

- **யு-சேவ்**
  வீவக வீடுகளில் வசிக்கும் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கு

  $330 முதல் $570 வரை

- **சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி**
  வீவக வீடுகளில் வசிக்கும் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கு

  1.5 முதல் 3.5 மாதம் வரை தள்ளுபடி

குறிப்பு: வழங்கப்படும் அனுகூலங்கள் தனிநபர் அல்லது குடும்பங்களின் தகுதிவரம்பைப் பொறுத்து அமையும்.

மூத்தோருக்கான ஆதரவு

- **மசேநி நிரப்புத்தொகை**
  மசேநி கணக்கில், பணி ஓய்வுக்காலத்திற்கான தற்போதைய அடிப்படைத் தொகையை விடக் குறைவான தொகையைக் கொண்ட, 50 வயதுக்கும் மேற்பட்ட தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு

  $500 முதல் $1,500 வரை

- **மெடிசேவ்**
  65 வயதுக்கும் மேற்பட்ட தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு

  $150 முதல் $450 வரை

- **ரொக்கம்**
  21 வயதுக்கும் மேற்பட்ட சிங்கப்பூரர்களுக்கு

  - **வாழ்க்கைச் செலவினச் சிறப்புத்தொகை**
    தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு

    $200 முதல் $400 வரை

  - **உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்**
    அனைத்துச் சிங்கப்பூரர்களுக்கும்

    $100 முதல் $250 வரை

  - **பொருள், சேவை வரிப் பற்றுசீட்டுத் திட்டம்**
    குறைந்த, நடுத்தர வருமானம் ஈட்டும் சிங்கப்பூரர்களுக்கு

    $450 அல்லது $850



சிங்கப்பூரர்களுக்கும் பிள்ளைகள் உடைய குடும்பங்களுக்கும் ஆதரவளித்தல்



அனைத்துச் சிங்கப்பூரர்களுக்கும் ஆதரவளித்தல்

- தகுதிபெறும் சிங்கப்பூரர்களுக்கு **$200 முதல் $400 வரையிலான வாழ்க்கைச் செலவினச் சிறப்புத்தொகை**
- அனைத்துச் சிங்கப்பூர்க் குடும்பங்களுக்கும் **$500 சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள்**
- தகுதிபெறும் சிங்கப்பூர் வீவக குடும்பங்களுக்கு **$570 வரையிலான யு-சேவ் சிறப்புத்தொகை**





நமது பிள்ளைகளைப் பேணி வளர்த்தல்

- 12 வயதுக்கும் குறைவான எல்லாச் சிங்கப்பூர்ப் பிள்ளைகளுக்கும் **$500 LifeSG சிறப்புத்தொகை**
- **பாலர்பள்ளி, மாணவர் பராமரிப்பு நிலைய நிதியுதவிகளுக்கான** குடும்ப மாதாந்தர வருமானத்துக்கான தகுதிவரம்பு, முறையே **$15,000, $6,500** என அதிகரிப்பு

மூத்தோருக்கும் கூடுதல் தேவையுடைய குடும்பங்களுக்கும் ஆதரவளித்தல்



மூத்தோர் நலமுடன் மூப்படைய துணைபுரிதல்

- தகுதிபெறும் மூத்தோருக்கு **$1,500 வரையிலான மசேநி நிரப்புத்தொகை**
- 2027இல் 55லிருந்து 65 வயதுக்கு உட்பட்ட மூத்த ஊழியர்களுக்குக் கூடுதலான **மசேநி பங்களிப்பு விகிதங்கள்**; முதலாளிகளுக்கு **மசேநி சந்தாத் தொகை அதிகரிப்பிற்கான கழிவும்** உண்டு
- மசேநி உறுப்பினர்களுக்குப் **புதிய முதலீட்டுத் திட்டத்தின்கீழ்** குறைந்த செலவினம், வாழ்நாள் முழுமைக்குமான அம்சங்கள்





கூடுதல் தேவையுடைய குடும்பங்களுக்கு ஆதரவளித்தல்

- மேம்படுத்தப்பட்ட **கொம்லிங்க் பிளஸ் முன்னேற்றத் தொகுப்புத்திட்டங்கள்**
  - குடும்பப் பயிற்றுவிப்பாளர்களின் வழிகாட்டுதலில் முன்னேற்றம் காணும் கொம்லிங்க் பிளஸ் குடும்பங்களுக்கு **ஒவ்வொரு காலாண்டும் $500**
  - தொடர்ந்து பாலர்பள்ளிக்குச் சென்றுவரும் பிள்ளைகளையும், நிலையான வேலையும் உடைய, தகுதிபெறும் கொம்லிங்க் பிளஸ் குடும்பங்களுக்கு **மேலும் அதிகமான வழங்குதொகைகள்**

சிங்கப்பூரர்களுக்கான ஆதரவு

ஏப்ரல் 2026 – மார்ச் 2027



2026

ஏப்ரல் முதல் ஜூன் வரை

- யு-சேவ் [மேம்படுத்தப்பட்டது]
  - $110 முதல் $190 வரை — ஏப்ரல்
- சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி
  - 0.5 அல்லது 1 மாதம் — ஏப்ரல்

ஜூலை முதல் செப்டம்பர் வரை

- யு-சேவ் [மேம்படுத்தப்பட்டது]
  - $110 முதல் $190 வரை — ஜூலை
- சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி
  - 0.5 அல்லது 1 மாதம் — ஜூலை
- பிள்ளைகளுக்கான LifeSG சிறப்புத்தொகை [புதிது]
  - $500 — ஜூலை
- ரொக்கம் [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு]
  - $450 அல்லது $850 — ஆகஸ்ட்
- மெடிசேவ் [பொருள், சேவை வரிப் பற்றுச்சீட்டு]
  - $150 முதல் $450 வரை — ஆகஸ்ட்
- ரொக்கம் [வாழ்க்கைச் செலவினச் சிறப்புத்தொகை] [புதிது]
  - $200 முதல் $400 வரை — செப்டம்பர்

‘உங்களுக்கான ஆதரவு’ கணிப்பானைப் பயன்படுத்தி, உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் கிடைக்கக்கூடிய ஆதரவைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள்

go.gov.sg/sfyc2026



அக்டோபர் முதல் டிசம்பர் வரை

- யு-சேவ்
  $55 முதல் $95 வரை — அக்டோபர்
- சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி
  0.5 அல்லது 1 மாதம் — அக்டோபர்
- மசேநி நிரப்புத்தொகை [புதிது]
  $500 முதல் $1,500 வரை — டிசம்பர்
- ரொக்கம் [உத்தரவாதத் தொகுப்புத்திட்டம்]
  $100 முதல் $250 வரை — டிசம்பர்

2021

ஜனவரி முதல் மார்ச் வரை

- சமூக மேம்பாட்டு மன்றப் பற்றுச்சீட்டுகள் [புதிது]
  $500 — ஜனவரி
- யு-சேவ்
  $55 முதல் $95 வரை — ஜனவரி
- சேவை, பராமரிப்புக் கட்டணத் தள்ளுபடி
  0.5 மாதம் — ஜனவரி

குறிப்பு: வழங்கப்படும் அனுகூலங்கள் தனிநபர் அல்லது குடும்பங்களின் தகுதிவரம்பைப் பொறுத்து அமையும்.

புதுப்பிக்கப்பட்ட நமது பொருளியல் உத்தியை முன்னெடுத்துச் செல்லுதல்



தொழில் செலவுகளைச் சமாளித்தல்

- 2026 மதிப்பீட்டு ஆண்டிற்கு, **40% நிறுவன வருமான வரித் தள்ளுபடி**
  - நிறுவனம் ஒன்றுக்கு அதிகபட்சம் **$30,000**
  - 2025இல் குறைந்தபட்சம் உள்ளூர் ஊழியர் ஒருவரைக் கொண்டு செயல்படும் நிறுவனங்களுக்குக் குறைந்தபட்சம் **$1,500**



மாறிவரும் உலகில் இணைதல்

- உள்ளூர் நிறுவனங்கள் வெளிநாடுகளில் விரிவாக்கம் காண மேம்பட்ட ஆதரவு
  - சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்களுக்கு **70% வரையிலும்**, மற்ற நிறுவனங்களுக்கு **50% வரையிலும்** மேலும் அதிகமான மானியம்
  - தொழில்நிறுவனங்கள் வெளிநாட்டுச் சந்தைகளில் வேரூன்ற, **சந்தை ஆயத்தநிலை உதவி மானியம்** மேம்பாடு
  - வர்த்தகம், சிறிய, நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான அசையாச் சொத்துக் கடனின் உச்சவரம்பை அதிகரிக்க, **தொழில்நிறுவன நிதி ஆதரவுத் திட்டம்** மேம்பாடு



நமது தொழில்நிறுவனச் சூழலை வலுப்படுத்துதல்

- சிங்கப்பூரில் அதிக வளர்ச்சியுள்ள நிறுவனங்கள் பங்குச் சந்தையில் இடம்பெற **$1.5 பில்லியன் மதிப்புடைய Anchor Fund**
- **முதலீட்டுச் சந்தை மேம்பாட்டுத் திட்டத்தை** விரிவுபடுத்த **$1.5 பில்லியன்**
- ஆரம்ப, வளர்ச்சி நிலைகளில் உள்ள அதிநவீனத் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான முதலீடுகளை ஊக்குவிக்க **புதிய நிறுவனங்களுக்கான எஸ்ஜி இணை முதலீட்டுத் திட்டம்** விரிவாக்கம்

செயற்கை நுண்ணறிவை உத்திபூர்வ அனுகூலமாக முன்னிறுத்துதல்



உருமாற்றத்தை வழிநடத்துதல்

- தேசிய அளவிலான செயற்கை நுண்ணறிவுசார் முயற்சிகளை வழிநடத்த, பிரதமரின் தலைமையில் **தேசியச் செயற்கை நுண்ணறிவு மன்றம்** தோற்றுவிப்பு
- தேசியச் **செயற்கை நுண்ணறிவு இலக்குகளைக்** கொண்டு முக்கிய துறைகள் உருமாற்றம்



செயற்கை நுண்ணறிவின் பயன்பாட்டைத் துரிதப்படுத்துதல்

- செயற்கை நுண்ணறிவுசார் தொழில் உருமாற்றத்தை வழிநடத்த **செயற்கை நுண்ணறிவு ஆர்வலர்** திட்டம் துவக்கம்
- தகுதிபெறும் செயற்கை நுண்ணறிவுச் செலவினத்தை உள்ளடக்க, **தொழில்நிறுவனப் புத்தாக்கத் திட்டம்** விரிவாக்கம்
- மேலும் அதிகமான செயற்கை நுண்ணறிவு சார்ந்த தீர்வுகளை உள்ளடக்க, **உற்பத்தித்திறன் தீர்வுகள் மானியம்** விரிவாக்கம்



ஊழியர்களுக்கு ஆற்றலளித்தல்

- ஊழியர்கள் நடைமுறைக்கு உகந்த செயற்கை நுண்ணறிவுத் திறனாற்றல்களை வளர்த்துக்கொள்ள உதவ, **தொழில்நுட்பத்துறைத் திறன்பயிற்சி, வேலை அமர்வுத் திட்டம்** விரிவாக்கம்
- **மறுவடிவமைக்கப்பட்ட ஸ்கில்ஸ்ஃபியூச்சர் இணையத்தளம்மூலம்** ஏற்புடைய செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகளைக் கண்டறிய சிங்கப்பூரர்களுக்கு உதவி
- குறிப்பிட்ட செயற்கை நுண்ணறிவுப் பயிற்சிகளை மேற்கொள்ளும்போது, **செயற்கை நுண்ணறிவு வளங்களின் முதன்மைப் பதிப்புகளுக்கு ஆறு மாத இலவச அனுமதி**

மீள்திறன்மிக்க, திறனாற்றல் உடைய ஓர் ஊழியரணியை உருவாக்குதல்



குறைந்த வருமான ஊழியர்களைக் கைதூக்கிவிடுதல்



- ஜூலை 2026 முதல் **தகுதிபெறும் உள்ளூர்ச் சம்பளம் $1,800க்கு** உயர்வு
- **படிப்படியாக உயரும் சம்பள உதவித்தொகைத் திட்டம்** நீட்டிப்பு; மேம்பாடு
- **வேலைநலன் திறன் ஆதரவுத் திட்டத்தின்** அடிப்படைப் பிரிவு மேம்பாடு

ஸ்கில்ஸ்ஃபியூச்சர் திட்டத்தை முன்னெடுத்துச் செல்லுதல்

- ஸ்கில்ஸ்ஃபியூச்சர் சிங்கப்பூர் அமைப்பும் சிங்கப்பூர் ஊழியரணி அமைப்பும் **அரசு ஆணைபெற்ற புதிய அமைப்பாக** ஒருங்கிணைப்பு

பணியிடைக்கால ஊழியர்கள், மூத்தோர் ஆகியோருக்கான நம்பிக்கையை வலுப்படுத்துதல்



- தொழில்துறைக்கு உகந்த மேலும் அதிகமான பயிற்சி வகுப்புகளைக் கொண்டு **ஸ்கில்ஸ்ஃபியூச்சர் திறன் மேம்பாட்டுத் திட்டம்** விரிவாக்கம்
- **மூத்த ஊழியருக்கான வேலை நியமன உதவித்தொகை 2027** வரை நீட்டிப்பு

வெளிநாட்டு ஊழியர் கொள்கைகள் புதுப்பிப்பு

- 2027 முதல் குறைந்தபட்சத் தகுதிபெறும் சம்பளம் உயர்த்தப்படுதல்
  - வேலை அனுமதி அட்டை: **$6,000**
  - S-பாஸ் அனுமதி அட்டை: **$3,600**
- 2028 முதல் **வேலை அனுமதித் தீர்வையில்** மாற்றம்

நம் சிங்கப்பூர் உணர்வைப் புதுப்பித்து வலுப்படுத்துதல்



நமது பிணைப்புகளை வலுப்படுத்துவோம்

- **சிங்கப்பூரின் கலாசார, மரபுடைமை நிலையங்களை** வலுப்படுத்துதல்
  - புதுப்பிக்கப்பட்ட மலாய் மரபுடைமை நிலையம் திறக்கப்படும்
  - சிங்கப்பூர்ச் சீனக் கலாசார நிலையத்தின் வருகையாளர் எண்ணிக்கையை, ஈடுபாட்டுத் திறனை விரிவுபடுத்துதல்
  - இந்திய மரபுடைமை நிலையத்தின் சமூக ஈடுபாட்டு முயற்சிகளையும் நிகழ்ச்சிகளையும் மேம்படுத்துதல்
- விளையாட்டு வசதிகள் பெருந்திட்டம்வழி **விளையாட்டு வசதிகளுக்கு எளிதில் சென்றடையும் நடைமுறையை** மேம்படுத்துதல்





“முதலில் நாம்” எனும் சமுதாயத்தை உருவாக்குதல்

- தகுதிபெறும் உள்ளூர் நன்கொடைகளுக்கு வழங்கப்படும் **250% வரித் தள்ளுபடிகள் 2029** வரை நீட்டிப்பு
- **நிறுவனத் தொண்டூழியத் திட்டம் 2029** வரை நீட்டிப்பு
- அடித்தள முயற்சிகளை ஊக்குவிக்க **$50 மில்லியன் எஸ்ஜி பங்காளித்துவ நிதி** அறிமுகம்

MOF
MINISTRY OF FINANCE
SINGAPORE

மேல்விவரங்களுக்கு
www.singaporebudget.gov.sg

go.gov.sg/2026budgetbooklet

12 பிப்ரவரி 2026 நிலவரப்படி

நிழற்படங்கள்: தேசிய இளையர் மன்றம், அரசாங்கத் தொழில்நுட்ப அமைப்பு